# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 19.06.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் பண்புகளுள் ஒரு சிறப்புப்பண்பு **ராஃபிஃ** என்பதாகும். அதாவது மூஃமின்களுக்கு உயர் பதவிகளை வழங்குபவன். உயர் பதவிகள் எவ்வாறு கிடைக்கும்? மூஃமின் நற்செயல்கள் செய்ய கடுமையாக முயற்சி செய்த பிறகு அல்லாஹ்வின் அருளால் கிடைக்கும். சில நேரம் அல்லாஹ் தனது அருளால் மட்டுமே மனிதனுக்கு உயர் பதவிகளை வழங்கி விடுகிறான். அந்த உயர் பதவிகளைப் பற்றி மனிதன் சிந்தித்துக்கூட பார்க்க முடியாத அளவிற்கு அல்லாஹ் உயர்வை வழங்குகிறான். அல்லாஹ்வின் சிறப்பான அடியார்கள், வலிமார்கள் ஆகியவர்களுக்கு தனது நெருக்கத்தை அதிகமாக வழங்கி மேன்மேலும் உயர்வை வழங்குகிறான். இன்னும் சிலரை நபி என்றும் வழங்கி தனது சிறப்பான போதனையின் மூலம் உயர் பதவியை வழங்குகிறான். திருக்குர்ஆனில் அல்லாஹ் தூய சொற்கள் அவனை நோக்கியே எழுகின்றன. நற்செயல்கள் அவற்றை உயர்த்துகின்றன (35:11) என்று கூறுகின்றான். இது ஒரு வசனத்தின் ஒரு பகுதி ஆகும். நற்செயல்களே அவற்றை உயர்த்துகின்றன என்ற இந்த பகுதியின் விளக்கத்தை ஒரு நூல் இவ்வாறு எடுத்துரைக்கிறது. இந்த நூலில் பல அகராதிகளில் வந்துள்ள விளக்கத்தை ஒன்றாக தொகுத்துள்ளார்கள். அதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது நல்ல செயல்களை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான். நற்செயல்கள் போற்றப்படுகின்றன என்றும் இதற்கு பொருள் கொள்ளலாம். அல்லது நற்செயல்கள்தான் உயர்ந்த நோக்கங்களை அடைவதற்கான வழிகள் ஆகும். நற்செயல்கள் இல்லாமல் மனிதனுடைய எந்த விஷயமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஆக, அல்லாஹ் ராஃபிஃ ஆவான். அவ்வாறே அவன் காதிர் – வல்லமை உள்ளவனும் ஆவான். அவன் எவ்வாறு வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும் உயர்ந்த தகுதிகளையும், அருட்களையும் வழங்க முடியும். ஆனால் பொதுவான வகையில் அவன் ஒரு விதியை ஏற்படுத்தியுள்ளான். அதாவது நற்செயல்கள்தான் உயர்வின் பக்கம் கொண்டு செல்கிறது.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நற்செயல்களின் வாயிலாக மனிதனுக்கு இறைவனின் பக்கம் உயர்வு ஏற்படுகிறது. அதாவது நற்செயல்கள் செய்கின்ற நல்ல மூஃமின்களுக்கு அவர்கள் செய்த நற்செயல்களின் காரணமாக அல்லாஹ்வின் பக்கம் உயர்வு கிடைக்கிறது. நபிமார்களின் தகுதி இதில் மிகவும் உயர்ந்ததாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

நான் எனது ஜமாஅத்தை நோக்கி இவ்வாறு கூறுகிறேன். அதாவது நற்செயல்கள் செய்வது மிகவும் அவசியமாகும். அல்லாஹ்விடம் ஏதாவது ஒன்று செல்ல முடியும் என்று சொன்னால் நற்செயல்கள்தான் செல்கின்றன.

இவ்வுலகிலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற வேண்டுமென்றால் அதற்கு நற்செயல்கள் மிகவும் அவசியமானவையாகும். மறு உலகின் மீது மனிதனுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கும் என்றால் அல்லாஹ்வின் உயர் தகுதியைப் பெற வேண்டும். இதை பெறுவதற்கென்று அல்லாஹ் விதித்துள்ள விதிதான் நீங்கள் நற்செயல்களை செய்யுங்கள் என்பதாகும்.

அரபு நாட்டில் அறியாமை காலத்தில் மூழ்கியிருந்தவர்களிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு கீழ்படிவதால் நீங்கள் தீமைகளை விட்டு விலகுவது மட்டுமல்லாமல் நன்மை, இறையச்சம், மரியாதை, கண்ணியம் ஆகியவற்றின் மிக உயர்ந்த தகுதியைப் பெறலாம் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

இன்று உங்களை ஏழையாகப் பார்க்கின்ற சமுதாயங்கள் உங்களை அறிவற்ற முட்டாள்கள் என்று எண்ணுகின்ற சமுதாயங்கள் ஒரு நாள் உங்கள் முன் தலை குனிவார்கள். ஆனால் இவ்வனைத்து உயர்வும், மரியாதையும் தூய ஈமானின் மூலம் தான் கிடைக்கும் என்று அல்லாஹ் கூறுகிறான். மேலும் உயர்ந்த நல்லொழுக்கங்களை மதித்தால்தான் கிடைக்கும். நற்செயல்களை செய்தால்தான் கிடைக்கும். எனவே இதைப் பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

ஒரு நாளில் முட்டாள்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் முன் முழு உலகத்தையும் அல்லாஹ் தலை குனிய வைத்து விட்டான். இதை அல்லாஹ் திருக்குர்ஆனில் பதிவு செய்து வருங்கால முஸ்லிம்களுக்கு வழிகாட்டியுள்ளான். இந்த விதியை நீங்கள் பின்பற்றினால் உங்கள் உயர் தகுதிகளை நீங்கள் பெறலாம். ஆனால் அல்லாஹ் தனது தூய வேத நூலில் கூறியுள்ள நற்செயல்களை செய்யாமல் முஸ்லிம்கள் உலக இச்சைகளை பின்பற்றுகிறார்கள். இதன் விளைவாக முன்னோர்கள் சம்பாதித்த நன்மைகளை இழந்து விட்டார்கள். இறைவனின் பெயரால் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் இரத்தத்தை குடிக்கிறார். முஸ்லிம் அல்லாத பிற முஸ்லிம்களை ஆட்சி செய்வதற்கு இதுவே காரணமாகும். முஸ்லிம் அரசுகள் தமது உள்நாட்டுப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு முஸ்லிம் அல்லாத அரசுகளின் உதவியை எதிர்பார்க்கின்றன. முஸ்லிம் நாடுகளில் அமைதி இல்லை. கொலைகள் நடக்கின்றன. குழப்பம் காணப்படுகிறது என்றால் பிற முஸ்லிம் நாடுகள் அதில் தலையிடுவதற்கு பதிலாக ஐரோப்பாவும், அமெரிக்காவும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தலையிடுகின்றன. இதற்காக இந்த நாடுகள் தன்னை அர்ப்பணிப்பதில்லை. மாறாக பலவந்தமாக இதில் தலையிடுகின்றன. அதன் பிறகு முஸ்லிம் அல்லாத இந்த நாடுகளின் வேலையை செய்பவர்கள் முஸ்லிம் நாட்டு மக்களோடு மிகவும் வரம்பு மீறி நடந்து கொள்கின்றார்கள். இதற்கு முஸ்லிம் நாடுகள் எதிர்ப்புக் குரல் எழுப்புகின்றனர்.

ஆக, இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி செயல்படாத காரணத்தால், முஸ்லிம்கள் உயர்வைப் பெறுவதற்குப் பதிலாக வீழ்ச்சியை நோக்கி செல்கிறார்கள். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றி சிறந்த நற்செயல்கள்தான் உங்களின் விளக்குகளுக்கு ஒளியூட்டக் கூடியதாகும். எனவே சிந்தித்து, ஆராய்ந்து செயல்படுங்கள். ஆனால் சிந்தித்து ஆராய்ந்த பிறகும் முஸ்லிம் ஆலிம்களும், தலைவர்களும் எங்களது செயலின் காரணமாகவும், தீய நடவடிக்கைகளின் காரணமாகவும் நமக்கு தலைகுனிவு ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள் என்றாலும் இக்காலகட்டத்தில் குறிப்பாக அல்லாஹ் செய்யச் சொன்ன நற்செயல்களை எப்படி செய்வது என்று யோசிக்க இவர்கள் தயாராக இல்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசர், அல்லாஹ்வுக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையே புகழ்வதில் எப்போதும் மூழ்கி இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது கொண்ட நேசத்தின் காரணமாக அல்லாஹ் அவர்களை இக்காலத்தின் இமாமாகவும், மஹ்தி மஸீஹாகவும் அனுப்பினான். அல்லாஹ் தனது ஒளியை அவர்களுக்கு வழங்கினான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நேசரை நீங்கள் மறுப்பது மட்டுமல்லாமல் இன்று இந்த இமாமை ஏசிப்பேசி, தீய சொற்களை எழுதி வருபவர்தான் உண்மையான முஸ்லிம் என்றே கூறப்படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பல கவிதைகள் பாடியுள்ளார்கள். இவ்வாறிருக்க கொடுமை இழைக்கின்ற இந்த ஆலிம்கள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி காஃபிர் ஆவார். (நவூதுபில்லாஹ்) இவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அவமதித்துள்ளார்கள் என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளியை சரியான முறையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைத் தவிர இக்காலத்தில் யாரும் புரிந்து கொள்ளவும் இல்லை. புரிந்து கொள்ளவும் முடியாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்து உயர்ந்த பதவி பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான் முழுமையாக அறிந்திருந்தார்கள். இதை அல்லாஹ் ஏற்கனவே தீர்மானித்திருந்தான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளியின் அழகிய தன்மையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். இதுவும் அவர்கள் ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இருந்து பெற்றதே ஆகும். எனவே இந்த உண்மை நேசரோடு உண்மையான முறையில் இணைபவர்கள் தான் இனறு நற்செயல்கள் செய்து உயர்ந்த பதவிகளை அடைவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தகுதியையும் பரிசுத்த ஒளியையும் பற்றி சூரா நூரின் ஒரு வசனத்திற்கு விளக்கம் அளிக்கும் போது கூறுகிறார்கள். அதை உங்கள் முன் எடுத்துரைக்கிறேன்.

**சூரா நூரின் 36வது வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

அல்லாஹ் வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒளியாக விளங்குகின்றான். அவனது ஒளி ஒரு மாடத்தைப் போன்றது. அதில் ஒரு விளக்கு உள்ளது. அந்த விளக்கு ஒரு கண்ணாடிக் குமிழுள் இருக்கிறது. அந்தக் கண்ணாடிக் குமிழ் ஒளிவீசிக் கொண்டிருக்கும் ஒரு நட்சத்திரத்தைப் போன்றது. அந்த விளக்கு கிழக்கையோ மேற்கையோ சார்ந்திராத அருளுக்குரிய ஒரு ஒலிவ மரத்தி(ன் எண்ணெய்யி)னால் எரிக்கப்படுகிறது. அதன் எண்ணெய், நெருப்பு அதனைத் தீண்டாவிட்டாலும் ஒளி வீசுகிறது. ஒளி, அது பல ஒளிகளின் ஒளிப்பிழம்பாக இருக்கிறது. அல்லாஹ்தான் நாடுபவர்களைத் தன் ஒளியின்பால் வழிகாட்டுகின்றான். மேலும் அல்லாஹ் மக்களுக்குத் (தேவையான) எடுத்துக் காட்டுகளை(க் கூறி) விளக்குகின்றான். மேலும் அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கு அறிபவனாவான். (24:36)

முதலில் அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் ஒளி ஆவான் என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் ஒளி ஆவான். அதாவது உயரத்திலும் தாழ்விலும் தென்படுகின்ற ஒளி, அது ஆன்மாக்களில் இருந்தாலும், உடலில் இருந்தாலும், நிரந்தரமானதாக இருந்தாலும், தற்காலிகமானதாக இருந்தாலும் சுய ஒளியாக இருந்தாலும், பிறரிடமிருந்து பெற்ற ஒளியாகி இருந்தாலும், வெளிப்படையாக இருந்தாலும் அந்தரங்கமாக இருந்தாலும், அல்லாஹ்விடமிருந்து அருள் பெற்றதாகவே ஒளி பெறுகின்றன. அல்லாஹ்வின் பொதுவான அருட்கொடை எல்லாவற்றையும் பொதுவாக சூழ்ந்துள்ளது. அல்லாஹ்வின் ஒளியைப் பெறாதது ஏதுமில்லை. அவனே ஒளியின் ஊற்று ஆவான். அவனிடமிருந்தே எல்லா அருளும் வெளி வருகின்றன. எல்லா ஒளியின் அடிப்படைக் காரணி ஆவான். எல்லா ஒளிகளுக்கும் அல்லாஹ்வே காரணமாக அமைகிறான். எல்லா கருணைகளுக்கும் அவனே உரைவிடமாவான். அவனே சத்தியமானவன். எல்லா பிரபஞ்சங்களையும் நிலைத்திருக்கச் செய்பவன். எல்லாவற்றையும் காப்பவன் அவனே. அழிவுகள் எல்லாமே சீர் அமைப்பு எல்லாமே அவனிடமே உள்ளது. எல்லா பொருட்களையும் இல்லாமை என்ற இருளிலிருந்து இருப்பவையாக ஆக்கினான். இது இறைவனின் பொதுவான அருள் ஆகும். இந்த அருளிலிருந்து ஒவ்வொருவரும் பலன் பெறுகின்றனர். இதை அல்லாஹ் நூருஸ்ஸமாவாத்தி வல் அர்ழ் என்று கூறி விளக்கியுள்ளான். இந்த அருட்கொடைதான் ஒரு முழு வட்டத்தைப் போன்று எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. உலகத்தின் எல்லா படைப்புகளும், மூஃமின், மூஃமின் அல்லாதவர்கள், மலைகள், தண்ணீர், மிருகங்கள் என்று எல்லாவற்றையும் அல்லாஹ் தனது இந்த அருளைப் பொதுவாக ஆக்கி சூழ்ந்துள்ளான். இதிலிருந்து பலன் பெறுவதற்கு எந்த தகுதியையும் கொண்டிருப்பது நிப்நதனையல்ல.

இதற்கு எதிராக ஒரு சிறப்பான அருளும் உண்டு. ஆனால் அது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டது. இந்த சிறப்பான அருளை அனுபவிப்பதற்கு சில தகுதகளும் திறன்களும் இருக்க வேண்டும். அவ்வாறு திறன் கொண்டவர்கள் தான் இந்த அருளிலிருந்து பயன்பெற முடியும். நபிமார்களின் முழுமை வாய்ந்த ஆன்மா இதில் மிகவும் தலைசிறந்த, உயர் தகுதிகள் வாய்ந்த சிறப்பு நல்லொழுக்கங்களை எல்லாம் முழுமையாகப் பெற்றிருந்த முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். இறைவனின் சிறப்பு அருளைப் பெற தகுதியுடையவர்களில் முதன்மை வாய்ந்தவர்கள் நபிமார்கள் ஆவர். நபிமார்களிலும் மிக அதிகமான திறன் மற்றும் தகுதிகள் கொண்டவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எல்லா சிறப்புகளும் கொண்டவர்கள் ஆவார்கள். இந்த சிறப்புகளும் தகுதிகளும் திறன்களும் இல்லாதவர்கள் மீது இறைவனின் சிறப்பான அருள் இறங்குவதில்லை.

இறைவனுடைய இந்த சிறப்பான அருட்கொடை மிகவும் நுட்பமான சத்தியமாகும். இதை மிகவும் நுட்பமாக சிந்தித்தால் இதன் உண்மை தெரிய வரும். ஹிக்மத்தின் பல நுட்பங்களுள் இரு ஒரு நுண்ணிய ஞானமாகும். இது பொதுவாக எல்லாருக்கும் தென்படுவதில்லை. எனவே அல்லாஹ் முதலில் வெளிப்படையாக தென்படுகின்ற பொதுவான அருளை எடுத்துக்கூறி, அதாவது முழு உலகிலும், வானங்களிலும் காணப்படுகின்ற ஒளியை எடுத்துக்கூறியபின் குறிப்பான ஒளியை எடுத்துரைத்து அதற்கு ஒரு உதாரணமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அல்லாஹ் குறிப்பிடுகிறான். அந்த உதாரணம் இந்த வசனத்தின் (24:36) அடுத்த பகுதியில் கூறப்படுகிறது. அதாவது இந்த ஒளியின் உதாரணம், முழுமையான மனிதத் தூதர் ஆவார். இது ஒரு மாடத்தைப் போன்றது. சுவரில் ஒளி விளக்கு வைப்பதற்காக ஒரு இடம் வைக்கப்பட்டிருக்கும். அதை மாடம் என்பர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவ்விடத்தில் மாடம் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் விரிவான நெஞ்சை குறிக்கிறது. பிறகு ஒரு உதாரணம் விளக்கப்படுகிறது. அந்த மாடத்தில் ஒரு விளக்கு உள்ளது. ஒரு Lamp உள்ளது. அந்த விளக்கு என்பது அல்லாஹ்வின் வஹி ஆகும். அந்த விளக்கு ஒரு கண்ணாடிக் குமிழுக்குள் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. ஒரு விளக்கை கண்ணாடிக் குமிழுக்குள் வைத்தால் காற்றினால் அந்த விளக்கு அணைவதிலிருந்து பாதுகாக்கப்படுகிறது. எந்தவொரு விளக்கும் கண்ணாடிக்குள் வைப்பதால் அது பாதுகாக்கப்படுவது மட்டுமல்லாமல் அதன் ஒளியும் அதிகமாகிறது. பொதுவாக எல்லாருமே நன்கு அறிவர். மண்ணெண்ணெய் விளக்கு ஏழை நாடுகளில் இன்றும் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த விளக்கின் மீது சிமினி அல்லது கண்ணாடிக் குமிழ் வைக்கப்பட்டால் விளக்கு பாதுகாப்பாக எரிகிறது. அதை காற்றடிக்கும் போதும் மக்கள் வெளியே கொண்டு திரிவார்கள். ஆனால் அது அணைவதில்லை. Lamp ஆனது Torch -ல் கண்ணாடியை வைத்தால் அல்லது reflector வைத்தால் அதனால் வெளிச்சம் இன்னும் அதிகரித்து வருகிறது.

ஆக **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** அந்த விளக்கு ஒரு கண்ணாடிக் குமிழுக்குள் இருக்கிறது. அது மிகவும் சுத்தமாக இருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மிகவும் பரிசுத்தமான உள்ளத்தில் உள்ளது. அந்த பரிசுத்தமான உள்ளம் தனது இயல்பால் மிகவும் தூய்மையாகவும், எல்லாவிதமான அசுத்தங்களிலிருந்தும் சுத்தமாகவும் தூய்மையாகவும் உள்ளது. மேலும் அந்த உள்ளம் அல்லாஹ் அல்லாதவற்றின் தொடர்பிலிருந்து தூய்மையாக உள்ளது. இதில் அல்லாஹ்வின் நேசத்தைத் தவிர வேறு எதுவும் எந்த நேசமும் தென்படுவதில்லை. அல்லாஹ்வின் வஹி இந்த தூய உள்ளத்தில் இறங்குவதற்கு இந்த உள்ளம் முற்றிலும் தகுதிவாய்ந்ததும் உரிமை உடையதும் ஆகும். இந்த தூய உள்ளத்தில் அல்லாஹ்வின் தூய ஒளி இறங்கியதும் இது முழு உலகையும் ஒளியூட்ட தொடங்கியது. இது ஒளிவீசும் நட்சத்திரத்தைப் போன்று முழு உலகிற்கும் ஒளியூட்டக்கூடியதாக ஆகி விட்டது. அல்லாஹ் நேர்வழி காட்ட விரும்பிய மக்களுக்கு இந்த ஒளி தென்பட்டது.

பிறகு இந்த விளக்கு ஆலிவ் மரத்தின் எண்ணெய்யால் ஒளியூட்டப்பட்டது எனறு அல்லாஹ் இன்னொரு உதாரணத்தை கூறுகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இங்கு அருளுக்குரிய ஒலிவ மரம் என்பது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய இருப்பு ஆகும். முழுமைத்துவம் மற்றும் எல்லா வகையான அருளும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒன்றாக இணைந்துள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருள், எந்த திசை, காலம், இடம் ஆகியவற்றிற்கும் உட்பட்டது அல்ல. மாறாக, எல்லா இடங்களிலும், எல்லா காலங்களுக்கும் கியாமத் நாள் வரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருட்கொடை இருக்கும். இது எல்லாருக்கும் பொதுவான அருளாகும். இது ஒருபோதும் முடிவடையாது. இந்த அருட்கொடை எப்போதும் கிடைக்கின்ற வழியில் நடப்பது அவசியமாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்தும் இறை கட்டளையின்படி செயல்படுவதே அந்த வழியாகும்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒலிவ மரத்தின் எண்ணெய்யால் வஹி என்ற விளக்கு ஒளியூட்டப்பட்டுள்ளது என்று அல்லாஹ் கூறுகின்றான். இங்கு எண்ணெய் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் தரமான அறிவாகும். இந்த அறிவு ஒளியூட்டப்பட்டதாகும். இதில் எல்லா விதமான உயர்ந்த நல்லொழுக்கங்களும் நிரம்பியுள்ளது. இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பில் வைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அறிவிலும், எண்ணங்களிலும் வைக்கப்பட்டுள்ளது. இவையனைத்தும் இறைவனின் தூய ஊற்றிலிருந்து வெளிப்பட்ட தூய ஒளியாகும். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முழுமையடைந்த அறிவு, திறன், உள்ளம் இவை அனைத்தும் விளக்குகளை எரிப்பதற்கு உதவும் எண்ணெய்யின் பணியை மேற்கொள்ள தகுதி உடையதாக இருக்கிறது.

பிறகு அருளுக்குரிய அந்த மரம் மேற்கையோ கிழக்கையோ சாராதது என்று அல்லாஹ் கூறுகின்றான். (24:36)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பில் எந்த ஏற்ற இறக்கமும் இல்லை. அதாவது இயல்பில் ஏதாவது அதிகமாகவும், குறைவாகவும் இல்லாமல் மிகவும் சமமான நிலையில் இருக்கின்றது. இது சிறந்த முறையில் படைக்கப்பட்டுள்ளது. இதன் வடிவமைப்பு மிகவும் உயர்தரமானதாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பு முன்பும் நேர்மையானதாகவே இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின இயல்பு அல்லாஹ்வின் வஹி இறங்குவதற்கு முன்பும் மிகவும் நேர்மையான இயல்பாகவே இருந்தது என்று வரலாறு நமக்கு எடுத்துரைக்கின்றது. எப்போதும் அவர்கள் நீதியை நிலைநாட்டுகின்றவராகவும் சரியான முடிவு எடுப்பவர்களாகவும் இருந்தார்கள். அக்காலத்தின் காஃபிர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தீர்ப்பிற்காக வருவார்கள். இந்த அளவு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பு சத்தியத்தின்பால் ஈர்க்கப்பட்டிருந்தது.

எனவே அல்லாஹ்வின் வஹியும் இந்த இயல்பிற்கு ஏற்ப அமைந்திருந்தது. அதற்கு ஏற்ப அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பை எவ்வித ஏற்ற இறக்குமின்றி சம நிலையானதாக ஆக்கி இருந்தான். மார்க்கத்தை எல்லா வகையிலும் முழுமைப்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் வழி அவர்கள் மீது இறங்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் அவ்வாறு ஆக்கியிருந்தான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் இயல்பில் (ஜலால்) கம்பீரமும், கோபமும் இருந்ததைப் போன்று தவ்ராத் மூஸாவின் இயல்புக்கு ஏற்ப ஜலாலி ஷரீஅத் இறங்கியது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இயல்பில் மன்னிப்பும், மிருதுவான தன்மையும் காணப்பட்டது. எனவே இஞ்சீலின் போதனை அதற்கேற்ப மன்னிப்பும், மிருதுவான தன்மையும் வாய்ந்ததாக காணப்படுகிறது. ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பு மிகவும் சமநிலைவாய்ந்ததாக இருக்கிறது. எல்லா நேரமும் மன்னிப்பும் இருந்ததில்லை. அதைப்போன்று எல்லா நேரமும் கோபமும் கடுமையும் இருந்ததில்லை. மாறாக மிகவும் ஞானத்தோடும் இடம் பொருள் ஏவல் அறிந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். கடுமை காட்ட வேண்டிய இடத்தில் கடுமையும், மிருதுவாக நடந்து கொள்ள வேண்டிய இடத்தில் மிருதுவாகவும் நடந்தார்கள். எனவே திருக்குர்ஆனும் இவ்வாறே நடுநிலை கொண்ட போதனைகளையே வழங்குகிறது. திருக்குர்ஆனின் போதனையில் கடுமை, கருணை, அச்சுறுத்துதல், பொறுமை ஆகியவை அடங்கியுள்ளன. எங்கு கோபப்பட வேண்டுமோ அங்கு கோபம் கொண்டுள்ளது. எங்கு பேசத் தேவையோ அங்கு பேசியுமிருக்கிறது. எனவே திருக்குர்ஆனின் ஒளி விளக்கு இந்த அருளுக்குரிய மரத்தின் எண்ணெய்யால் ஒளியூட்டப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பு திருக்குர்ஆனின் ஒளியின் மூலம் ஒளியூட்டப்பட்டிருக்கிறது. இது கிழக்கையோ மேற்கையோ சேராதது. இதுவே திருக்குர்ஆனின் போதனைகளின் ஒரு தனித்துவமும்

உயர்ந்த பதவியும் ஆகும். முந்தைய வேதங்களின் போதனைகள் எதுவும் இதன் உயரத்தை அடைய முடியாது. இந்தப் பதவியைத்தான் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் அல்லாஹ் வழங்கினான்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து, நிச்சயமாக நீர் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர் (64:5). அதாவது எல்லா சிறப்பும் பண்புகளும் முழுமையாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பில் வைக்கப்பட்டுள்ளது. இதை விட அதிகமாக நாம் வேறு யாரிடமும் பார்க்க முடியாது. ஏனென்றால் மனிதனுடைய சிந்தனை சிறந்த நல்லொழுக்கத்தை எவ்வளவு எதிர்பார்க்க முடியுமோ அவ்வளவு அதிகமாக மனிதர்களுள் முழுமையான ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் காணப்படுகிறது. இதை விட அதிகமாக நம்மில் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. ஏனென்றால் அழீம் என்ற சொல் அரபி மொழியில் ஒரு பொருளுக்காக பயன்படுத்தப்படும்போது அதன் எல்லா தன்மைகளும் சிறப்பாக முழுமை அடைந்திருக்கின்றது என்று பொருள். மனிதர்களுள் இருக்கின்ற எல்லா திறன்களையும் அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இயல்பில் சிறப்பாக முழுமையாக்கியுள்ளான் என்பதை அழீம் என்ற சொல்லைப் பயன்படுத்தி நமக்கு வெளிப்படுத்துகிறான்.

இதை மேலும் விளக்கியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்த எண்ணெய் நெருப்பு இல்லாமலேயே எரியும் அளவிற்கு மிகவும் திறன் வாய்ந்தது. நெருப்பை அதன் மீது வைக்கா விட்டாலும் அது எரியக்கூடியதாகும்; எரிவதற்கு திறன் கொண்டதாகும். அதாவது அறிவுத் திறனும் உயர் தரமான நல்லொழுக்கங்கள் யாவும் முழுமையாகவும் எந்த நபியிடம் இருந்தன. நுட்பமான ஞானங்கள் அடங்கிய மிகத் தூய இறை வஹி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்குவதற்கு முன்பே அவர் தானாகவே பிரகாசமடைய மிகவும் தகுதிவாய்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய இயல்பை அல்லாஹ் இந்த அளவுக்கு உயர் தகுதி வாய்ந்ததாக வஹி இறங்குவதற்கு முன்பே ஆக்கியிருந்தான். அக்கால மக்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வஹி இறங்குவதற்கு முன்பே அவர்களிடமிருந்து ஒளியைப் பெற்றனர். நூருன் அலா நூர் (24:36) அருளுக்குரிய ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பல ஒளிகள் ஒன்றாக இருந்தன. முன்பே பல ஒளிகள் இருந்தன. அந்த ஒளிகளுக்கு மேல் இன்னும் ஒரு ஒளி, அதாவது இறைவனின் வஹி ஆகிய ஒளி இறங்கியது. இந்த ஒளி இறங்கியதும் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் மஜ்மஉல் அன்வார் ஆகி விட்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதை மேலும் விளக்குகின்றார்கள்:**

ஒளியின் மீதுதான் இறை வஹி என்ற ஒளி இறங்குகிறது. இதுவே இறை வஹியின் ஒளி இறங்குவதன் தத்துவமாகும். இந்த ஒளி இருளின் மீது இறங்குவதில்லை. ஏனென்றால் அருளிளிலிருந்து பலன் பெறுவதற்கு ஒற்றுமை அவசியமாகும். இருளுக்கு ஒளியோடு எந்த ஒற்றுமையும் இல்லை. மாறாக ஒளிக்கு ஒளியோடு ஒற்றுமை உண்டு. இறைவன் ஒற்றுமையை பார்க்காமல் எந்த வேலையும் செய்வதில்லை. இறைவனின் பணி எல்லாமே ஞானமுடையதாக இருக்கிறது. எனவே அவன் ஒற்றுமையில்லாமல் எந்த பணியையும் செய்வதில்லை. அவன் ஞானம் இல்லாத எந்த வேலையையும் செய்வதில்லை.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒளியிலிருந்து பலனடைய விரும்புகின்ற பொதுவான மக்களுக்கும் இதுவே விதிமுறை ஆகும். யாரிடம் கொஞ்சம் ஒளி இருக்குமோ அவருக்கு இன்னும் ஒளி வழங்கப்படும். நல்ல இயல்பு இருந்தால்தான் அல்லாஹ் சரியான வழியைக் காட்டுவான். ஒன்றுமே இல்லாதவருக்கு ஒன்றும் வழங்கப்படுவதில்லை. கண்களின் ஒளி உடையவர் மட்டுமே சூரியனின் ஒளியை காண்பார். கண்களின் ஒளியை இழந்தவர் சூரியனின் ஒளியையும் காணமாட்டார். இயல்பில் ஒளி குறைவாக உடையவருக்கு வெளியிலிருந்து ஒளி குறைவாகவே கிடைக்கும். இயல்பின் ஒளி அதிகமாக பெற்றவருக்கு இந்த ஒளியும் அதிகமாக கிடைக்கும்.

அல்லாஹ் சக்திக்கு ஏற்றவாறு இயல்பில் ஒளியை வைத்துள்ளான். எனவே இயல்பின் ஒளியை அதிகம் பெற்றவன் பிற ஒளியையும் அதிகமாக ஈர்ப்பார். குறைவான இயல்பின் ஒளியைப் பெற்றவர் மிகக் குறைவாகவே பிற ஒளியை ஈர்ப்பார். ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கும் திறனுக்கும் ஏற்றாற்போல் இதன் மூலம் பலன் பெறுகிறார்.

அல்லாஹ்வின் ஒளியை பிரதிபலிக்கும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளி இதுவே ஆகும். முழு உலகத்திற்கும் கியாமத் வரை பயன் தரக்கூடிய ஒளி இதுவே ஆகும். இங்கு ஒரு விஷயத்தை விளக்கமாக கூறுவது அவசியமாகும்.

அதாவது இக்காலகட்டத்தில் இந்த ஒளியிலிருந்து மிக அதிக பலனை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே பெற்றார்கள். இதன் மூலம் உலகத்திற்கும் அந்த ஒளியை பரப்பினார்கள். இறுதியான வஹியின் ஒளி முழு உலகிலும் பரவ வேண்டும். அதை உயரமான மினாராக்களில் ஏற்ற வேண்டும். இதன் மூலம் உலகம் இதன் ஒளியிலிருந்து பலன் பெற வேண்டும். இந்த பணியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்து வந்ததன் காரணமாகவே அவர்கள் காத்தமுல் குலஃபா என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு முன்வந்த அவ்லியாக்கள், முஜத்ததீன்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த போதனையை பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். இப்போது முஹம்மதிய மஸீஹின் மூலம் இந்த விளக்கினை உயரமான மாடங்களில் வைத்து அசாதாரணமான முறையில் முழு உலகின் எல்லா இடங்களிலும் ஒளியைப் பரப்புகின்ற பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமே நடக்கும். இன்று இந்தப் பணிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் மூலமே நடக்கின்றன. இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறந்த முன்மாதிரிக்கு ஏற்ப பரப்பும் பணியை நிறைவேற்றி வருகிறோம். மிக உயரிய மினராக்களின் வாயிலாக முழு உலகிற்கும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சுன்னத்தையும் முன்மாதிரியையும் காட்ட முயற்சி செய்கிறோம். பிறகு காத்தமுல் குலஃபாவிற்கு பிறகு அல்லாஹ்வின் உதவி மற்றும் உறுதுணையால் இந்த மாடங்களையும் மினராக்களையும் உயர்த்துவதற்கு கிலாஃபத் அமைப்புதான் செயல்பட வேண்டும். இந்த பணியை அல்லாஹ் கிலாஃபத்தே அஹ்மதிய்யாவிடம் ஒப்படைத்துள்ளான்.

இந்த வசனத்திற்கு அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

எந்த வீடுகள் உயர்த்தப்பட வேண்டுமென்றும் அவற்றில் அவனது பெயர் நினைவு கூறப்பட வேண்டும் என்றும் இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அந்த வீடுகளில் (இந்த விளக்கு) உள்ளது. அவற்றில் அவனது தூய்மை, காலை நேரங்களிலும் மாலை வேளைகளிலும் எடுத்துரைக்கப்படுகிறது. (24:37)

அதாவது இந்த ஒளி முஸ்லிம்களின் வீடுகளில் உள்ளது. அந்த வீடுகளில் அல்லாஹ்வின் கட்டளையின் அடிப்படையில் செயல்படுகின்றவர்கள் உள்ளனர். அதன் அடிப்படையில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறான வீட்டைப் பற்றி இவை உயர்த்தப்படும் என்று அல்லாஹ் கூறுகின்றான். உயர்த்தப்பட்ட வீட்டின் அடையாளத்தையும் இங்கு அல்லாஹ் கூறுகின்றான். அந்த வீடுகளில் அல்லாஹ்வின் பெயர் நினைவு கூறப்படும். அதில் பகலிலும் மாலையிலும் அல்லாஹ்வை புகழப்படுகிறது. தொழுகை முறைப்படி பேணப்படுகிறது. எனவே இந்த ஒளியிலிருந்து பயனடைவதற்காகவும் மார்க்கத்திற்கு உதவி புரிபவர்களாக ஆக விரும்புபவர்களுக்கும் முதலில் பேண வேண்டியது அல்லாஹ்வை நினைவு கூற வேண்டும். அதோடு இறைவணக்கத்தின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். காலைப்பொழுதின் தொழுகையையும் பேண வேண்டும். இந்த ஒளியிலிருந்து பயனடையவும், பயனடைந்த மக்களோடு சேர்வதற்கும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கூற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுகை எனது கண்களின் குளிர்ச்சியாகும் என்று கூறினார்கள்.

தொழுகை ஒவ்வொருவரும் தத்தமது சக்திக்கேற்ப அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத்தரும்.

பொதுவாக ளுஹர், அஸர் தொழுகையை சேர்த்துத் தொழுகின்ற பழக்கம் உள்ளது. நிர்பந்தமான சூழ்நிலை இருந்தால் தவிர அவ்வாறு செய்யக்கூடாது. சிலருக்கு நிர்பந்தம் இருக்கலாம். ஆனால் இதுவே பழக்கமாகி விடக்கூடாது.

முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலின் ஒரு ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இவரைப் பற்றி இவர் ளுஹர் தொழுகைக்கு முன் 4 ரக்அத்துகள் தொழுவார்கள் என்று கூறப்படுகிறது. ஒருவர் இவரிடம் நீங்கள் ளுஹர் தொழுகைக்கு முன் 4 ரக்அத்துகள் தொழுவதை தொடர்ந்து செய்து வருகிறீர்களே இதற்கு என்ன காரணம் உள்ளது என்று கேட்டார். அதற்கு அவர், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு செய்ததை நான் கண்டேன். அப்போது நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கேட்ட போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இது வானங்களின் கதவுகள் திறக்கப்படுகின்ற நேரமாகும். எனவே இந்த வேளையில் என்னுடைய ஏதாவதொரு நற்செயல் உயர வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று கூறினார்கள்.

ஆக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளியிலிருந்து நேரடியாக பலன் பெற்று தமது ஒவ்வொரு நற்செயலையும், தமது உயர் பதவிக்கு வழிகோலாக ஆக்க முயற்சி செய்த மக்கள் இவர்கள் ஆவர். இந்த மேன்மக்களின் வீடுதான் உயர்ந்த நிலையில் அடைந்த இவர்கள் ரலியல்லாஹு அன்ஹும் என்று அழைக்கப்பட்ட போது இவர்களின் மேன்மை, கண்ணியம் இன்னும் உயர்ந்தது. பிறகு வருங்கால மக்களுக்கு இவர்கள் ஒரு நல்ல முன்மாதிரி ஆனார்கள்.

இன்று முஹம்மதிய மஸீஹின் அடியார்களாகிய நம்முடைய பணியும் இதுதான். இதை செய்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் நமது செயல்களின் உயர்வுக்காக நம்மால் முடிந்த வரை முயற்சி செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

கொஞ்சம் ஒளி தம்மில் கொண்டவர்தான் பிற ஒளியையும் பெற முடியும். இந்த ஒளியைப் பெறுவதற்கு நற்செயல்கள் செய்வது நிபந்தனையாகும். அல்லாஹ்வின் நெருக்கத்தை தருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலிருந்தும் பயன் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு அடுத்த வசனத்தில் காலையிலும், மாலையிலும் எவ்வாறு அல்லாஹ்வை நினைவு கூற வேண்டும்? என்று அல்லாஹ் இன்னும் விளக்குகிறான்.

(இவ்வாறு நினைவு கூறும்) ஆண்களைக் கொடுக்கல் வாங்கல் தொடர்புகளோ, வணிகத் தொழிலோ அல்லாஹ்வை நினைவு கூறுவதிலிருந்தும் தொழுகையை நிறைவேற்றுவதிலிருந்தும் ஸக்காத்து கொடுப்பதிலிருந்தும் கவனமற்றவர்களாக ஆக்குவதில்லை. உள்ளங்களும் கண்களும் கலங்கும் ஒரு நாளைக் குறித்து அவர்கள் அஞ்சுகின்றனர். (24:38)

சஹாபா பெருமக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒளியிலிருந்து பலன்பெற்று வீட்டுப் பொறுப்புகள், சமூக பொறுப்புகள், வியாபார பொறுப்புகள் ஆகிய இவ்வனைத்தும் இருந்தபோதிலும் அல்லாஹ்வின் உரிமையை பேணுவதில் கவனக் குறைவு காட்டியதில்லை. அவர்கள் தங்கள் இறைவணக்கத்தில் மிக உயர்ந்த தரத்தை நிலைநாட்டினார்கள். அவர்கள் தங்களது தொழுகைகளை சரியான நேரத்தில் ஜமாஅத்தாக தொழுது வந்தார்கள். ஹதீஸில் ஏற்கனவே நான் கூறியது போன்று ளுஹர் தொழுகையின் 4 ரக்அத்துகள் (சுன்னத்தை) அல்லாஹ்வின் விருப்பத்தை பெற வேண்டும் என்பதற்காக தொடர்ந்து இடைவிடாது தொழுது வந்தார்கள். தம்முடைய நிலையை உயர்த்துவதற்காக தொழுதார்கள்.

இந்த வசனத்தில் ஸக்காத்து கொடுப்பது பற்றியும் வந்துள்ளது. இந்த மக்கள் ஸக்காத்து கொடுத்து மார்க்கத் தேவைகளைப் பூர்த்தி செய்பவர்கள் ஆவர். அதேப் போன்று இறைவனின் அடியார்களுடைய உரிமையையும் பேணுபவர்கள ஆவர்.

ஆக, முழுமையான ஒளியை பெற்றிருந்த நபியோடு இணைந்ததன் காரணமாக இவர்களின் செயல்கள் இன்று வரை நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றன. முன்னவர்கள் எவ்வாறு முன்மாதிரியை நிலைநாட்டினார்களோ அவ்வாறே இன்னும் நிலைநாட்டுவது அவசியமாகும். இக்காலகட்டத்தில் வியாபாரத்தின் பக்கம் மக்களுக்கு கவனம் அதிகமாக இருக்கிறது. எனவே இறைவணக்கங்களின் பக்கமும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். முயற்சி செய்ய வேண்டும்.

திஜாரத், பய்ஃ இவை இரண்டிற்கும் என்ன வித்தியாசங்கள்? இதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் விளக்கியுள்ளார்கள். திஜாரத் என்பது வாங்குவதும் விற்பதும் ஆகும். ஆனால் பய்ஃ விற்பது மட்டும் ஆகும். இன்றைய காலகட்டத்தில் நாம் பார்த்தால் services எல்லாம் பய்ஃ என்பதில் அடங்கும். இந்த நாட்டில் குறிப்பாக இது மிக அதிகமாக காணப்படுகிறது. இதுவும் தொழுகையிலிருந்து நம்மை தடுக்கிறது. மக்கள் தமது வேலையை சரியான நேரத்தில் முடிக்க வேண்டும் என்ற முயற்சியில் தமது கடமையை அசல் நோக்கத்தை மறந்து விடுகிறார்கள்.

எனவே உண்மையான மூஃமின்கள் உலக வேலைகளில் மூழ்கியிருந்த போதிலும் இறுதி நாளின் மீது அச்சம் இருக்கும் என்று அல்லாஹ் கூறுகின்றான். அவர்களுடைய வியாபாரங்கள் பௌதீக பணிகள் அவர்களை இறைவணக்கத்தை விட்டு கவனம் இழக்கச் செய்வதில்லை. எப்போதும் மரணத்திற்குப் பதில் கூற வேண்டிய அந்த நாளின் காட்சி அவர்களின் கண்முன் இருக்கும். அவர்கள் கடமையான இறைவணக்கங்களின் பக்கமும் கவனம் செலுத்துகிறார்கள். நஃபிலான இறைவணக்கங்களின் பக்கமும் கவனம் செலுத்துகிறார்கள்.

**பிறகு இறுதியில் அல்லாஹ் கூறுகின்றான்:**

இதன் பயனாக அல்லாஹ் அவர்களுக்கு அவர்களின் செயல்களுக்குரிய மிகச் சிறந்த கூலி வழங்கி தன் அருளால் அவர்களுக்குப் பொருட்செல்வத்தையும்) மிகுதியாக வழங்குவான். மேலும் அல்லாஹ் தான் நாடியவருக்கு (வாழ்க்கைப் பொருட்களை) அளவின்றி வழங்குகிறான்.(24:39)

அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் உருவாக்கிய ஒளி, அவர்களின் மீது முழுமையான போதனையை இறக்கினான். இவ்விரண்டும் மூஃமின்களின் வீடுகளை உயர்த்துவதற்குக் காரணமாக அமைந்தது. எப்போதும் இதன்படி செயல்படுவதால் இந்த நற்செயல்களுக்கான தொடர் நீண்டு கொண்டே செல்லும். இதற்கான வாக்குறுதியை அல்லாஹ் இந்த வசனத்திலும் பிற வசனங்களிலும் வழங்குகிறான். இந்த நற்செயல்களை உங்களது வீடுகளில் நீங்கள் செய்ய ஆரம்பித்து, அவைகளை உள்ளத்தில் அமர்த்தி இதன்படி செயல்படுவதால் இதற்கான மிகச் சிறந்த நற்கூலியை பெறுவீர்கள். நீங்கள் செய்த செயலுக்கான அளவு மட்டும் நற்கூலியை அல்லாஹ் வழங்குவதில்லை. மாறாக இறைவன் தனது அருளால் இன்னும் அதிகமாக வழங்குவதாக கூறுகின்றான்.

நீங்கள் ஒரு அடி முன்னேற முயற்சி செய்தால் அல்லாஹ் தன் அருளால் பல அடிகள் உங்களை உயர்த்தி விடுவான். அல்லாஹ் மாலிக் ஆவான். அவன் வழங்குகின்ற கொடைகளை அளந்து பார்க்க முடியாது. தகுதிகள் உயர்த்து கொண்டே செல்லும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் நமக்கு கிடைத்த ஒளியை நாம் நமது வீடுகளிலும் நமது உள்ளங்களிலும் ஏற்றுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. இறைவன் என்றும் முடிவுறாத அருட்கொடையை நம்மீது அவன் எப்போதும் இறக்கிக் கொண்டே இருப்பானாக. எப்போதும் நாம் நற்செயல்கள் செய்பவர்களாக இருப்போம். ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 19.06.2009

Translated by : **Maulavi S. ABDUL QADIR**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**